இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 13.11.2026

அடிதடி துணை சபாநாயகரும் - ஆபாச எம்.எல்.ஏ.வும்

ஆறு மாத விஜய் ஆட்சிக்கு மகுடம் வைப்பதைப் போல இரண்டு சம்பவங்கள் நடந்துள்ளன.

ஒன்று: அடிப்படை வசதிகள் செய்து தரக் கோரி மனுக் கொடுக்க வந்தவரை அடி அடி என்று அடித்துள்ளார் துணை சபாநாயகர் ரவிசங்கர். துறையூரைச் சேர்ந்த கார்த்திக், தனது 23ஆவது வார்டில் இருக்கும் குடிநீர்ப் பிரச்சினை குறித்து துறையூர் எம்.எம்.ஏ.வான ரவி சங்கரைச் சந்தித்து மனுக் கொடுக்க வந்துள்ளார். ரவி சங்கருக்கு முதலில் போன் செய்கிறார். அவர் எடுக்கவில்லை என்றதும் நேரில் வந்துள்ளார். கார்த்திக்கை அடிக்கிறார் துணை சபாநாயகர். 'நான் விஜய்க்காக வோட்டுப் போட்டவன்' என்று கதறுகிறார் கார்த்திக். அதன் பிறகும் அடிக்கிறார் ரவிசங்கர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரல் ஆனது.

உடனே கார்த்திக்கை அழைத்து சமாதானம் செய்கிறார் துணை சபாநாயகர். 'துணை சபாநாயகரை சந்திக்கச் சென்றபோது கூட்ட நெரிசலில் தவறி விழுந்துவிட்டேன். என்னை யாரும் தாக்கவில்லை' என்று கார்த்திக் சொல்வது போல வீடியோ வெளியானது.

அதன்பிறகு உண்மையைச் சொல்லி விட்டார் கார்த்திக். "என்னை மிரட்டித்தான் துணை சபாநாயகர் ரவிசங்கர் அப்படிச் சொல்ல வைத்து வீடியோ எடுத்தார். நான் சொன்ன மாதிரி பேசவில்லை என்றால் உயிரோடு விட மாட்டோம் என்று மிரட்டினார். என் உயிரையும் என் குடும்பத்தையும் காப்பாற்றிக் கொள்ளவே அப்படிச் சொன்னேன்" என்று சொல்லி விட்டார் கார்த்திக்.

ஒரு சட்டமன்ற உறுப்பினர், அதுவும் தமிழ்நாடு சட்டமன்றத்தின் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் எப்படி இருக்கிறார் என்பதை நாடு பார்த்து தலைகுனிகிறது. இவரை இந்தப் பதவிக்கு நியமித்த போதே ஒரு புகைப்படம் இணையத்தில் வெளியானது. அது அதைவிடக் கேவலமானது.

இரண்டு: கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆபாசக் குறுஞ்செய்தி அனுப்பி இருக்கிறார் கள்ளக்குறிச்சி எம்.எல்.ஏ., அருள் விக்னேஷ். இப்படி ஒருவரை சட்டமன்ற உறுப்பினராக வைத்துள்ளார் விஜய். 'அந்த மாவட்ட ஆட்சியர் புகார் தந்தால் நடவடிக்கை எடுப்போம்' என்கிறார் அமைச்சர் ராஜ்மோகன். தலைமைச் செயலாளருக்கு புகார் சொல்லப்பட்டுள்ளதாக அரசு அதிகாரிகள் மட்டத்தில் தகவல் சொல்லப்பட்டுள்ளது. அமைச்சர் ராஜ்மோகனிடம் நேரில் வந்து சொல்ல வேண்டுமா?

மனுக் கொடுக்க வந்தவரைத் தாக்கிய துணை சபாநாயகர் மீது என்ன நடவடிக்கை எடுத்தார் முதலமைச்சர் விஜய்? இதுவரை எதுவுமில்லை.

பெண் மாவட்ட ஆட்சியருக்கு ஆபாசக் குறுஞ்செய்தி அனுப்பிய த.வெ.க. எம்.எல்.ஏ., அருள் விக்னேஷ் மீது என்ன நடவடிக்கை எடுத்தார் முதலமைச்சர் விஜய்? இதுவரை எதுவுமில்லை.

நேற்றைய தினம் எம்.எல்.ஏ.க்கள் அனைவரையும் சென்னைக்கு அழைத்தார் விஜய். அதில் இவர்கள் இருவரும் இருந்தார்கள். அந்த இருவரையும் ஸ்டார் ஹோட்டலில் உட்கார வைத்து பட்டு வேட்டி சட்டை கொடுத்துள்ளார் முதலமைச்சர் விஜய். தீபாவளி வாழ்த்துச் சொல்லி இருக்கிறார் விஜய். இதுதான் ஒரு முதலமைச்சருக்கு அழகா?

குறைந்தபட்சம், அவர்களைச் சந்திக்க மறுத்தார், அவர்களுக்கு அழைப்பு அனுப்பவில்லை, பட்டுவேட்டி சட்டை தரவில்லை என்றாவது தனது கோபத்தைப் பதிய வைத்திருக்க வேண்டாமா? 'அட்வைஸ் செய்தார்' என்று செய்திகளைப் பரப்புகிறார்கள். விஜய் என்ன அறிவுரை செய்திருப்பார்? 'வாழ்க்கையில் ஒரு ஜாலி இருக்க வேண்டியதுதான், அதற்காக அதற்கு அடிமையாகி விடக் கூடாது' என்று சொல்லி இருப்பாரா?

யாரையும் கேள்வி கேட்கும் நிலைமையில் விஜய் இல்லை என்பதுதான் உண்மை. யார் மீதும் நடவடிக்கை எடுக்கும் நிலைமையிலும் அவர் இல்லை. எந்தவொரு எம்.எல்.ஏ. கோபித்துக் கொண்டாலும் ஆட்சி கவிழ்ந்து போகும்.

'பவுடர்' அமைச்சர் சரத்குமார் மீது இதுவரை நடவடிக்கை இல்லை. விஜய் ரசிகையை பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கி சிக்கிய திருவைகுண்டம் எம்.எல்.ஏ., சரவணன் மீது நடவடிக்கை இல்லை. 'ஜட்டியைக் கழற்றி உட்கார வைத்து விடுவேன்' என்று சொந்தக் கட்சிக்காரர்களை போனில் மிரட்டிய அமைச்சர் ஜெகதீஸ்வரி மீது நடவடிக்கை இல்லை. மின்சாரக் கொள்முதலில் விளையாடி வரும் அமைச்சர் நிர்மல் குமார் மீது நடவடிக்கை இல்லை. 'அரசு வக்கீல் நியமனத்தில் ஊழல்' என்று குற்றம் சாட்டப்பட்ட அமைச்சர்கள் இருவர் மீது நடவடிக்கை இல்லை. கட்சிப் பெண்களை வளைப்பதாக ஆடியோ லீக் ஆன அமைச்சர் மீது நடவடிக்கை இல்லை. 'போதை மருந்து கடத்தலில் முக்கியப் புள்ளி' என்று சொல்லப்படுகிறவர் மீது நடவடிக்கை இல்லை. 100 கோடி நில மோசடியில் சிக்கிய அமைச்சர் ரமேஷ் மீது நடவடிக்கை இல்லை. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். இவர்கள் எவர் மீதும் விஜய்யால் நடவடிக்கை எடுக்க முடியாது.

இந்த வரிசையில் துணை சபாநாயகர் ரவிசங்கர் மீதும் விஜய்யால் நடவடிக்கை எடுக்க முடியாது. கள்ளக்குறிச்சி அருள் விக்னேஷ் மீதும் நடவடிக்கை எடுக்க முடியாது. இத்தகைய மனிதர்கள் தயவால்தான் அவர் முதலமைச்சராக இருக்கிறார். **கேவலம். மகா கேவலம்.**

'டம்மி' முதல்வர் விஜய் ஆட்சியில் தொடரும் பாலியல் கலாச்சாரம்!

கள்ளக்குறிச்சி டி.எஸ்.பி. பாலியல் சீண்டல்!

டி.ஜி.பி.யிடம் பெண் புகார் மனு!

கள்ளக்குறிச்சி, நவ.13 - கள்ளக்குறிச்சி டி.எஸ்.பி. மீது பாலியல் சீண்டலில் ஈடுபட்டதாக பெண் ஒருவர் பகிரங்கமாக குற்றம் சாட்டியுள்ளார்.

கள்ளக்குறிச்சி அடுத்த உலகங் காத்தான் கிராமத்தை சேர்ந்த அன் பழகன் மனைவி. இவர் டி.ஜி.பிக்கு புகார் மனு அனுப்பியுள்ளார்.

அதில் கூறியிருப்பதாவது :-

நான் இந்து ஆதிதிராவிடர் வகுப்பை சேர்ந்தவள். கடந்த 27.08.2026 அன்று காலை 7 மணியளவில் எங்களது பக்கத்து வீட்டில் உள்ளிட்டவர்களுடன் இட பிரச்னை சம்மந்தமாக முன்விரோ தம் இருந்து வந்ததால் என்னை தாக்கிவிட்டனர். அதனையடுத்து கள்ளக்குறிச்சி அரசு மருத்துவம னையில் சிகிச்சை பெற்று பின்னர் இதுகுறித்து கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். இந்த புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காமல் என்னை அலைக்க ழிப்பு செய்தனர்.

மேலும் கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவல கத்தில் பணிபுரியும் போலீஸ்காரர் ஒருவர் எதிரிக்கு உறவினர் என்ப தாலும் சாராய வியாபாரி மிரட்டலா லும் கள்ளக்குறிச்சி காவல் நிலை யத்தில் எனது புகார் மீது நடவடிக்கை எடுக்காமல் அலைக்க ழித்து வருகின்றனர்.

இதுசம்மந்தமாக கடந்த 28.09.2026, 14.10.2026 ஆகிய இரண்டு நாட்களும் நான் விழுப்புரம் சரக டி.ஐ.ஜி.யிடம் புகார் கொடுத்தேன். அதன்படி கடந்த 16.10.2026 காலை 10.30 மணி யளவில் நான் மற்றும் எனது மகன், வழக்கறிஞர் ஆகியோரு டன் கள்ளக்குறிச்சி டி.எஸ்பி. பார்க்க சென்றோம். 2 மணி நேரம் காத்திருந்தோம். அதன் பின்னர் 12.30 மணியளவில் டி.எஸ்பி. கலையரசன் எங்களை அழைத் தார். நாங்கள் உள்ளே சென்ற உடன் எனது மகனையும், வழக்க றிஞரையும் வெளியே போங்கள் என்று அனுப்பிவிட்டு எனது செல் போனையும் வாங்கி வைத்து கொண்டு டி.எஸ்பி. என்னிடம் புகார் சம்மந்தமாக பேசினார். விழுப்புரம் டிஜ.ஜி.யை சந்தித்ததை பற்றி கூறி னேன். அப்போது டி.எஸ்பி. எனது செல்போனில் உள்ள வீடியோவை பார்த்து ஆபாசமாக பேசி என் மீது தான் எப்.ஐ.ஆர். போடுவேன் எதிரி மீது எப்.ஐ.ஆர். போடமாட்டேன் என்று கூறி எனது ஆசைக்கு இணங்குமாறும் அப்போது எதிரி மீது எப்.ஐ.ஆர். பேடுகிறேன் என கூறிகொண்டே டி.எஸ்பி. அவரது இடது கைவிரலால் எனது வலது பக்ககழுத்தில் வருடினார். நான் அவரது கையை தட்டிவிட்டேன். அப்போது யோசித்து பதில் சொல். உனக்கும் உன் புருஷனுக்கும் பொருத்தம் இல்லை.

எப்படி அவனுடன் வாழ்கிறாய் 20 நிமிடம் டைம் எடுத்துக்கொள் என்று வெளியே நிற்குமாறு அனுப் பினார். திரும்ப என்னை அழைத்து பதில் சொல் என்று கேட்டார். நான் முடியாது என்று சொன்னேன். அதன் பிறகு டிஎஸ்பி உனது புகார் மீது எப்ஜஆர் போட மாட்டேன் வெளியே போ என்று அனுப்பிவிட் டார். மேலும் எனது வழக்கறிஞரை யும் அருவருப்பாக திட்டினார். நான் மன உளச்சலில் உள்ளேன்.

இவ்வாறு அதில் குறிப்பிடப்பட் டுள்ளது. மேலும் இதுசம்மந்தமாக இவர் கடந்த மாதம் 20 மதேதி இதற்கான நகலை ஆளுநர், சிஎம் செல், தலைமை செயலர், தேசிய மனித உரிமை ஆணையம், தமிழ்நாடு மாநில மகளிர் ஆணை யம் உள்பட 11 உயரதிகாரிகளுக்கு புகார் அனுப்பியும் நடவடிக்கை இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் இது தொடர்பாக பாதிக்கப்பட்ட பெண் நேற்று முன் தினம் நிருபர்களிடம் கூறுகையில் புகார் மனு தொடர்பாக விசார ணைக்கு சென்றபோது எனது வக்கீல் மற்றும் மகனையும் விசா ரணையின் போது வெளியே அனுப்பி வைத்துவிட்டு என்னிடம் புகார் மனு தொடர்பாக விசாரணை நடத்தினார். பக்கத்து வீட்டுக்காரர் தகராறை வீடியோவாக பதிவு செய் ததை டி.எஸ்பி.யிடம் காண்பித் தேன். அந்தபோனை பார்த்து கொண்டே உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் 15 வயது வித்தியாசம் உள்ளது.

உங்கள் கணவர் என்ன தொழில் செய்கிறார். பெயிண்ட் தொழிலாளியாக இருப்பதாக தெரிவித்தேன். கழுத்தில் கயிறு தான் இருக்கிறது. நகை இல்லை. எப்படி நீ குடும்பம் நடத்தினாய் எனக் கூறிக்கொண்டு என் உடம்பு மீது கை வைத்தார். சுதாரித்து கொண்ட நான், அவரது கையை தட்டிவிட் டேன். நான் சொல்வது போல் செயல்பட்டால் உனக்கு தேவையானதை செய்து கொடுப் பேன். எதிரி மீது வழக்கும் பதிவு செய்து அவர்களை கைது செய் வேன் எனக்கூறினார். அதற்கு நான் சம்மதிக்க மறுத்துவிட்டேன்.

வெளியில் புகார் கூறினால் இது சம்பந்தமாக குடும்பத்தினரை பக் கத்து வீட்டுக்காரர் வைத்து கொலை செய்துவிடுவேன் என மிரட்டினார். மேலும் இந்த மாவட்டத்தில் உள்ள அமைச்சர் வன்னி அரசு இருக்கும் வரை நான் தான் கள்ளக்குறிச்சி டி.எஸ்பி. என திமிராக கூறினார் என்றார்.

கள்ளக்குறிச்சி மாவட்ட பெண் ஆட்சியருக்கு, த.வெ.க.வை சேர்ந்த கள்ளக்குறிச்சி தொகுதி சட் டமன்ற உறுப்பினர் அருள் விக் னேஷ் செல்போனில் ஆபாச குறுஞ் செய்தி அனுப்பியதாக சமூக வலைதளங்களில் கடந்த நான்கு நாட்களாக பரவி வைரலாகிய நிலையில் இந்த விவகாரம் தமிழ் நாடு முழுவதும் பெரும் சர்ச் சையை ஏற்படுத்தி உள்ளது. இந்த நிலையில் அந்த பரபரப்பு அடங்கு வதற்குள் மீண்டும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பெண் கலெக்டருக்கு ஆபாச குறுஞ்செய்தி!

த.வெ.க., எம்.எல்.ஏ., மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்!

கம்யூனிஸ்ட் பெண்கள் அமைப்பு வலியுறுத்தல்!

சென்னை, நவ. 13 -

தமிழ்நாடு ஏஜடியுசி உழைக் கும் பெண்கள் அமைப்பு (இந்திய கம்யூனிஸ்ட் கட்சி) மாநில செயலா ளர் வஹிதா நிஜாம் நேற்று வெளி யிட்டுள்ள அறிக்கையில் கூறியி ருப்பதாவது:-

கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சி யர் பத்மஜாவுக்க, அத்தொகுதியின் ஆளுங்கட்சியான த.வெ.க. எம். எல்.ஏ. அருள் விக்னேஷ் ஆபாச மான குறுஞ்செய்திகளை அனுப்பி யதாகவும், அவரது இல்லத்திற்குச் சென்று அத்துமீறி தொல்லை கொடுத்ததாகவும் வெளியாகியுள்ள செய்திகள் பெரும் அதிர்ச்சியை ஏற் படுத்துகின்றன

இந்த சம்பவம் தொடர்பாக, மாவட்ட ஆட்சியரின் கணவரும் விழுப்புரம் மாவட்ட ஆட்சியரு மான ஷேக் அப்துல் ரஹ்மான், சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பி னர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தலைமைச் செயலாளருக்கு புகார் கடிதம் எழுதியுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன. இந் தப் புகார் தொடர்பான முழுமை யான விசாரணையை அரசு உட னடியாக மேற்கொள்ள வேண்டும். குற்றச்சாட்டுகளின் உண்மைத் தன்மையை வெளிக்கொண்டு வருவதற்கு முழுமையான, சுதந்தி ரமான விசாரணை அவசியம்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி என்பவர் அதிகமான பொறுப்பும், பொது ஒழுக்கமும், கொண்டிருக்க வேண்டியவர். ஆனால், தனது அரசியல் அதிகா ரத்தை ஒரு பெண்ணை அச்சுறுத் துவதற்கும் அவமதிப்பதற்கும் பயன்படுத்துவது கண்டனத்திற்குரி யது. ஒரு மாவட்ட ஆட்சியருக்கே அரசியல் அதிகாரம் படைத்த ஒரு வரால் இத்தகைய தொல்லைகள் ஏற்படுவதாகக் குற்றச்சாட்டு எழும் போது, சாதாரணமான உழைக் கும் பெண்களின் நிலை என்னவா கும் என்ற கேள்வியை எழுப்புகிறது. குற்றச்சாட்டுகள் உறுதி செய்யப்பட்டால் பாரதிய நியாய சம்ஹிதாவின் சட்டப் பிரிவு களின் கீழ் வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனவே, இந்த விவகாரத்தில் அரசியல் தலையீடு இல்லாத சுதந் திரமான, நியாயமான, காலவரை யறைக்குட்பட்ட விசாரணையை உடனடியாக நடத்த வேண்டும். பெண்களின் கண்ணியத்துடன் விளையாடும் எவருக்கும் மன்னிப் பில்லை என்பதையும் அரசியல் செல்வாக்கு சட்டத்தின் பிடியிலிருந்து யாரையும் காப்பாற் றாது என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தக்கூடிய முறையில் அரசு இந்த குற்றச்சாட்டை கையாள வேண்டும். இவ்வாறு அவர் கூறி யுள்ளார்.

திருத்தணி பழைய பேருந்து நிலையத்தில் பெண் பயணியிடம் 4 பவுன் நகை திருட்டு!

திருத்தணி, நவ.13 - திருத்தணி பழைய பேருந்து நிலையத்தில் பெண் பயணியிடம் 4 பவுன் நகை நூதன முறையில் திருடிய சம்பவம் பய ணிகளிடையே பெரும் பர பரப்பை ஏற்படுத்தியது.

ராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் அருகே ராஜபாளையம் கிராமத்தைச் சேர்ந்த ராம மூர்த்தி என்பவரின் மனைவி நாகராணி(54). அவர் திருத்தணி அருகே தலையாரிதாங்கல் கிராமத் தில் வசிக்கும் அவரது மகள் லட்சுமிக்கு தீபாவளி சீர்வரிசை கொடுப்பதற்கு நேற்று முன்தினம் திருத் தணி பழைய பேருந்து நிலையத்தில் பேருந்துக் காக காத்திருந்தார். சோளிங்கர் செல்லும் அரசு பேருந்தில் கூட்டத்து டன் கூட்டமாக பேருந்தில் ஏறி பயணம் செய்த போது அவர் கையில் வைத்திருந்த பலகாரம் கட்ட பையை பார்த்தபோது அதில் வைத் திருந்த 4 பவுன் நகை நூதன முறையில் திருடப் பட்டது பார்த்து அதிர்ச்சி அடைந்தார்.

அதே நேரத்தில் அவரு டன் பேசிக் கொண்டு பேருந்தில் ஏறிய பெண்க ளும் இல்லாததால், நூதன முறையில் நகைகள் பெண் கள் திருடிச் சென்றிருக்க லாம் என்று தெரிகிறது. நகைகள் இழந்த பெண் புகாரின் பேரில் திருத்தணி போலீசார் வழக்குப்பதிவு செய்து திருத்தணி பழைய பேருந்து நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள கண் காணிப்பு கேமராக்கள் ஆய்வு செய்து தீவிர விசா ரணை நடத்தி வருகின்ற னர். பேருந்து நிலையத்தில் பெண் பயணியிடம் நூதன முறையில் நகை திருட்டு சம்பவம் சக பய ணிகளிடையே பர பரப்பை ஏற்படுத்தியது.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி இளம் பேச்சாளர் மோகன் தாயாரின் மருத்துவ செலவிற்கு கழகத் தலைவர் தளபதி அவர்கள் வழிகாட்டுதலின் பேரில் கழக இளைஞரணி செயலாளர் சட்டமன்ற எதிர்க் கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆலோசனையின் பேரில் ரூபாய் 25000 த்திற்கான காசோலையை முன்னாள் அமைச்சர் சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.பெரியகருப்பன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார் முன்னிலையில் வழங்கினார். உடன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.சேதுபதிராஜா, கார்த்தி, பரணிகிட்டு, எஸ்.எம்.மதிவாணன், வீர ஈஸ்வரன் ஆகியோர் இருந்தனர்.